# துறையூர் நகராட்சி

2023–ம் ஆண்டு நவம்பர் மாதம் **30.11.2023** வியாழக்கிழமை காலை **10.30** மணிக்கு நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் கீழ்க்கண்ட பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய சாதாரண கூட்டத்தின் நடவடிக்கைகள்.

முன்னிலை நகர்மன்றத்தலைவர்
துறையூர்நகராட்சி

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 30.11.2023 | 01 | துறையூர் நகராட்சிக்கு உட்பட்ட பெரிய ஏரி சாலையில் உள்ள நகராட்சி ஆரம்ப பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் புதிதாக கட்டுப்பட்டுள்ள கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. அந்த மதிப்பீட்டில் அல்லாத பணிகளான Greenery Plotform, பின்புற படிகள், பாத்திரங்கள் சுத்தம் செய்யும் இடம் மற்றும் GI Pipe, GI Sheet, LED விளக்குகள், Alca Pannel பணிகள் மற்றும் குடிநீர் பணிகள் செய்திட மதிப்பீடு ரூ.9.80 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண்.3365/2023/இ1)**<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:91 அனுமதிக்கப்பட்டது |
| 30.11.2023 | **02** | துறையூர் நகராட்சிக்கு உட்பட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள சிறப்பு உறைவிட கட்டிடத்தில் குடிநீர் வசதி செய்திடவும், புதிய போர்வெல் மற்றும் Septic Tank அமைத்திடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண்.3366/2023/இ1)**<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2, மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்92 அனுமதிக்கப்பட்டது |
| 30.11.2023 | **03** | இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுக்கான 2022–2025ம் ஆண்டு வரைக்கான உரிமம் அனுபவித்துக்கொள்ள பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் குத்தகை இனம் 1.பேருந்துநிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம், 2.நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துக்கொள்ளும் குத்தகை உரிமம், 3. அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம், 4. பழையநகராட்சி அலுவலகத்தில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் இருசக்கர வாகனம் நிறுத்திக்கொள்வதற்கான குத்தகை உரிமம், மற்றும் ஏலம்போகமல் உள்ள சுவாமிநாதன் தினசரி மார்கெட் கடைகள் 15,16,17,18,22,34, 42,43.44. மற்றும் 45 க்கான குத்தகை உரிமம் , வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 3,4,6,8,9,10,11,12,13,14,15,16, மற்றும் 17 அண்ணா பேருந்து நிலையம் பழைய நகராட்சி அலுவலகவளாக புதிய கடை எண் 2,4,5,6,7,9,10,18,23,24 மற்றும் 25 கடைகளுக்கும் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விளம்பரத்தினை16.05.2023, 6.6.2023, 15.6.2023 தேதிகளில் விளம்பரம் செய்தமைக்கு தினகரன் நாளிதழுக்கு தலா ரூ20160/–, ரூ30430/– மற்றும் 6762/–வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு..<br>**ந.க.எண்.1096/2023/அ1**<br>**அலுவலககுறிப்பு:** மன்றம் ஒப்புதல் வழங்கலாம். | தீர்மான எண்:93 அனுமதிக்கப்பட்டது |
| 30.11.2023 | **04** | துறையூர் நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு. பெ.ராஜமாணிக்கம் என்பவர் வயது முதிர்வின் காரணமாக 31.10.2023–ல் ஓய்வு பெற உள்ளார். ஆதலால் அரசாணை எண் 111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 13.08.2007ன்படி அன்னாருக்கு வழங்க வேண்டிய சிறப்பு சேமநலநிதிக்கான நிர்வாக பங்குத் தொகை ரூ 10000/– வழங்கப்பட வேண்டி உள்ளது. எனவே மேற்படி பங்குத் தொகையினை திரு. பெ. ராஜமாணிக்கம், தூய்மை பணியாளருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**(ந.க.எண்.2734/2023/சி1)**<br>**(அ.கு)** அ. அனுமதிக்கலாம்.<br>ஆ. மேற்படி செலவினம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். | தீர்மான எண்:94 அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 30.11.2023 | **05** | துறையூர் நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும், வரி மற்றும் வரியில்லா இனங்களை நிலுவையின்றி 100 சதவீதம் வசூல் செய்யும் பொருட்டு, பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் ஆட்டோ மூலம் வரி மற்றும் வரியில்லா இனங்களை நிலுவையின்றி குறிப்பிட்ட தேதிக்குள் செலுத்த கோரியும், வரி மற்றும் வரியில்லா இனங்களை நீண்ட காலமாக செலுத்தாமல் உள்ள கட்டிடங்களை, கையகப்படுத்தபடவுள்ளது என சம்மந்தப்பட்ட கட்டித்திற்கு முன்பு, அறிவிப்பு பதாகை வைக்கவும், மற்றும் வரி மற்றும் வரியில்லா இனங்கள் தொடர்பாக கேட்பு அறிவிப்பு அச்சிடவும்(PRINT) மற்றும் இதர வருவாய் பிரிவு தொடர்புள்ள பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.1,00,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**(ந.க.எண்.3790/2023/அ1)**<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>3. | தீர்மான எண்:95 அனுமதிக்கப்பட்டது |
| 30.11.2023 | **06** | துறையூர் நகராட்சிக்கு சொந்தமான மாத வாடகை கடைகளின், மாத வாடகையினை, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் 1920 சட்ட விதிகளின்படி, ஒவ்வொரு பிரதி மாதம் 5-ம் தேதிக்குள் செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் மாத வாடகை கடை உரிமைதாரர்கள் ஒரு சிலர் தவிர, மற்றவர்கள் இந்நிதியாண்டு முடிவில் அல்லது அதற்கு அடுத்த நிதியாண்டுகளில் செலுத்தி வருகின்றார்கள். இதனால் இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி பணிகளில் கால தாமதம் மற்றும் வசூல் பணிகளில் மற்ற நகராட்சிகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளது. எனவே, இந்நகராட்சி கடை வாடகை உரிமைதாரர்கள் ஒவ்வொரு பிரதி மாதம் 5-ம் தேதிக்குள் கடை வாடகை செலுத்திட ஏதுவாகவும், மேலும் தொடர்ந்து மூன்று மாதங்கள் கடை வாடகை செலுத்தாத கடையின் உரிமம் இரத்து செய்து, மீண்டும் ஏலம் நடத்திடவும் அதற்கான செலவினத்தை சம்மந்தப்பட்ட குத்தகைதாரர்களிடமிருந்து வசூல் செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண்.3789/2023/அ1<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>1. இந்நகராட்சியின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு, மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:96 அனுமதிக்கப்பட்டது |
| 30.11.2023 | **07** | துறையூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் கழிவுநீர் வாய்க்கால் அமைத்திடவும், பூங்காக்கள், நவீன எரிவாயு தகனமேடை மற்றும் நகராட்சி பள்ளியில் புதிய கட்டிடம் அமைக்க மதிப்பீடு மற்றும் வரைபடங்கள் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் அதனை Consultancy மூலம் தயார் செய்து உரிய காலத்தில் சமர்த்திட வேண்டியுள்ளதால் மதிப்பீட்டு தொகையில் 1% சதவீதம் ஆலோசகர் கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண்.377/2023/இ1)**<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:97 அனுமதிக்கப்பட்டது |
| 30.11.2023 | **08** | இந்நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட தனியார் மருத்துவமனையிலும் பொது இடங்களிலும் மற்றும் வீடுகளில் நடைபெறும் பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை ஆகிய நிகழ்வுகளை கணிணியில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. அக்டோபர் - 2023 மாதத்திற்கு கீழ்கண்ட விபரப்படி கணிணியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.<br><br>**வ. எண் \| பிறப்பு மற்றும் இறப்பு விபரம் \| அக்டோபர் - 2023: ஆண் \| பெண் \| மொத்தம்**<br>1 \| பிறப்பு \| 55 \| 50 \| 105<br>2 \| இறப்பு \| 13 \| 9 \| 22<br>3 \| இறந்து பிறந்தவை \| 1 \| 0 \| 1<br><br>மேற்கண்ட விபரபடி அக்டோபர் - 2023 மாதத்திற்கு நிகழ்வுள்ள பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை எண்ணிக்கையை இந்நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந,க.எண்.3389/2023/எச்1)<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண் :98 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>30.11.2023</td>
<td>09</td>
<td>துறையூர் நகராட்சிக்குட்பட்ட 4 எண்ணிக்கையிலான குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீரினை மாதம் ஒருமுறை தரப்பரிசோதனை செய்திட வேண்டி உள்ளதால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகத்தில் மாதம் ஒருமுறை ஆய்வு செய்து மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டி உள்ளதால் ஒரு வருட ஆய்வுக்கு ரூ.30,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>(ந.க.எண்.1507/2018/இ2)<br><u>அலுவலக குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:99 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.11.2023</td>
<td>10</td>
<td>துறையூர் நகராட்சிக்குட்பட்ட அண்ணா பேருந்து நிலையத்தில் செயல்பட்டுக்கொண் டிருக்கும், நவீன கட்டண கழிப்பிடம் தற்போது இந்நகராட்சி பணியாளர்கள் மூலம் கீழ்கண்ட விவரப்படி வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>
<table>
<tr><th>1</th><th>2</th><th>3</th><th>4</th></tr>
<tr><th>வ. எண்</th><th>கழிப்பிட வகைப்பாடு</th><th>தற்போது வசூல் செய்யப்படும் தொகை (தடவை ஒன்றுக்கு)</th><th>உயர்த்தி வசூல் செய்யப்படவேண்டிய தொகை (தடவை ஒன்றுக்கு)</th></tr>
<tr><td>1.</td><td>சிறுநீர் கழிக்க</td><td>ரூ.0.50</td><td>ரூ.5.00</td></tr>
<tr><td>2.</td><td>மலம் கழிக்க</td><td>ரூ.1.00</td><td>ரூ.5.00</td></tr>
<tr><td>3.</td><td>குளிப்பதற்கு</td><td>ரூ.2.00</td><td>ரூ.10.00</td></tr>
</table>
<br>மேற்கண்டவாறு, அண்ணா பேருந்து நிலையத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கும், நவீன கட்டண கழிப்பிடம் தற்போது இந்நகராட்சி பணியாளர்கள் மூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதற்கு, பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம், வசூல் பணி மேற்கொள்ள ஆகும் இதர செலவினங்கள் மற்றும் அதிலிருந்து பெறப்படும் வசூல் விவரங்களை ஒப்பிட்டு பார்க்கும் போது, இந்நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. மேலும் அண்ணா பேருந்து நிலையத்தின் தரத்தினை கருத்தில் கொண்டும், ஏற்கனவே கலம் 3-ல் வசூல் செய்யப்பட்டு வரும் தொகையானது மிகவும் குறைவாக இருப்பதால் கலம் 4-ல் தெரிவித்துள்ளவாறு, உயர்த்தி வசூல் பணி மேற்கொள்ள, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>ந.க.எண்.1068/2023/அ1</u><br><u>அலுவலகக்குறிப்பு:-</u><br>1. இந்நகராட்சிக்கு ஏற்படுகின்ற வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு, தற்போது உயர்த்தி கோரப்பட்டுள்ள தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:100 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.11.2023</td>
<td>11</td>
<td>துறையூர் நகராட்சியில் பயன்பாட்டில் இருந்து வரும் JCB வாகனம் பழுதடைந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. JCB வாகனத்தை பழுது நீக்கம் செய்து நல்ல நிலையில் நகராட்சிக்கு வழங்க Raambaag Equipment and Service Pvt. Ltd., Trichy நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி அளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி JCB வாகனம் பழுது நீக்கம் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>ந.க.எண்.3773/2023/இ1<br><u>அலுவலக குறிப்பு :</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. JCB வாகனம் பழுது நீக்கம் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:101 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.11.2023</td>
<td>12</td>
<td>துறையூர் நகராட்சியில் மாண்புமிகு தமிழக முதல்வரின் காலை உணவுத்திட்டம் பெரிய ஏரி சாலையில் உள்ள நகராட்சி துவக்கப்பள்ளியில் முதலமைச்சர் காலை உணவுத்திட்டம் புதிதாக நகராட்சியால் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தினை திறக்க இருப்பதால் திறப்பு விழாவிற்கு தேவையான பந்தல், சேர், மைக்செட், மின்விளக்கு, அலங்கார விளக்குகள் ஆகியவை அமைக்கும் பணிக்கு பணியின் செலவித்தொகை ரூ.60,000/- அவசர அவசியம் கருதி 24.08.2023ல் நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்றதை தொடர்ந்து 24.08.2023 வரை விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.</td>
<td>தீர்மான எண்:102 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| வ.எண் | ஒப்பந்த்தாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.K..சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர். | ரூ.59950/– |
| 2 | திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர். | ரூ.62400/– |
| 3 | திரு.K. ராஜேஷ், ஒப்பந்ததாரர், துறையூர். | ரூ.65000/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண்.1–ல் உள்ள இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.K..சரவணன் துறையூர் அவர்கள் வழங்கிய விலைப்புள்ளி விலைவிகிதம் குறைவாக வழங்கி உள்ளதை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.889/2023/சி2)

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

30.11.2023 **13**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி, இந்நகராட்சிக்குட்ப்பட்ட பகுதிகளில் உள்ள வரியில்லா இனங்கள் மொத்தம் 145 வரிவிதிப்புகள் மட்டுமே உள்ளது. ஆனால், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அறிக்கையில் 167 வரிவிதிப்புகள் உள்ளது என தெரிவித்துள்ளனர். எனவே, கூடுதலாக உள்ள 22 வரிவிதிப்புகளை கண்டறிந்து நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர். எனவே, ஆண்டு குத்தகை இனங்கள் மற்றும் மூன்றாண்டு குத்தகை இனங்களில் மேற்கண்ட 14 வரிவிதிப்புகள் பயன்பாட்டில் இல்லாமலும், நிலுவைத்தொகை ஏதும் இல்லாமல் உள்ளதை UTIS–ல் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மான எண்:103 அனுமதிக்கப்பட்டது

| S. No | Property Allotment No | Property No | Allotment Start Date | Allotment End Date | Allotee First Name | Property Name | Rent Duration Type | Amount | Remark |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | **087/1** | 1 | - | - | TMT, GEETHA W/O. ELANGOVAN | ANNA BUS STAND - BUS DAILY COLLECTION | YEARLY LEASE | No Pending Payment. | - |
| 2 | **087/5** | 8 | - | - | CHELLADURAI. V | SWAMINATHAN DAILY MARKET LEASE | YEARLY LEASE | No Pending Payment. | - |
| 3 | **087/2** | 2 | - | - | SENGAYAN S/O. ARUMUGAM | ANNA BUS STAND - TOILET NO.1 | YEARLY LEASE | No Pending Payment. | - |
| 4 | **087/7** | 7 | - | - | TMT. LEELAMANI | ANNA BUS STAND - WEIGH MACHINE | YEARLY LEASE | No Pending Payment. | - |
| 5 | **087/4** | 7 | 04-01-2015 | 31/03/2016 | MADHANAGOPAL. J | ANNA BUS STAND - WEIGH MACHINE | YEARLY LEASE | No Pending Payment. | - |
| 6 | **087/501** | 501 | 04-01-2008 | 31/03/2009 | E. SELVAM | KASIKULAM LEASE | YEARLY LEASE | No Pending Payment. | - |
| 7 | **087/6** | 5 | 04-01-2013 | 30/03/2014 | SITTHAR S/O. POYYAMALAI | ANNA BUS STAND - TELEVISION ADVT. LEASE | THREE YEAR LEASE | No Pending Payment. | - |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | **087/255** | 255 | 07-01-2011 | 30/06/2012 | P.K.A. JAINUDEEN | ROAD SIDE TARMARIND TREE | THREE YEAR LEASE | No Pending Payment. | - |
| 9 | **087/15** | 15 | | | TMT. S. SUNDARAMMAL | ANNA BUS STAND - HOTEL(VEG) | THREE YEAR LEASE | No Pending Payment. | - |
| 10 | **087/14** (Allotment Number Not Found) | - | - | - | WEST THEPPAKULAM STREET, AVIN MILK BOOTH | WEST THEPPAKULAM STREET | - | - | Cancelled Allotment |
| 11 | **087/253** (Allotment Number Not Found) | - | - | - | PUBLIC TOILET OLD | - | - | - | - |
| 12 | **087/252** (Allotment Number Not Found) | - | - | - | BUS COLLECTION 1986 | - | - | - | - |
| 13 | **087/13** (Allotment Number Not Found) | - | - | - | ANNA BUS STAND AVIN MILK BOOTH | - | - | - | - |
| 14 | **087/254** (Allotment Number Not Found) | - | - | - | KASIKULAM | - | - | - | - |

**(ந.க.எண்.1068/2023/அ1)**
**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 30.11.2023 | **14** | துறையூர் நகராட்சிக்குட்பட்ட வரியில்லா இனங்கள் கீழ்கண்ட அட்டவணையில் உள்ள விவரப்படி ஏலம் / ஒப்பந்தப்பள்ளி கோரப்பட்டுள்ளது. | தீர்மான எண்:104 அனுமதிக்கப்பட்டது |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| **வ. எண்** | **வரியில்லா இனங்களின் விவரம்** | **ஏலம் / ஒப்பந்தப்பள்ளி கோரிய விவரம்** |
| 1. | பழைய நகராட்சி அலுவலகத்தில், இந்நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் இருசக்கரவாகனம் நிறுத்திக் கொள்வதற் கான குத்தகை உரிமத்திற்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | 11.02.2021, 28.07.2021, 18.08.2021, 15.09.2021, 12.01.2022, 30.03.2022, 19.05.2022,23.06.2022, 07.09.2022, 15.11.2022, 27.12.2022, 22.02.2023, 21.04.2023, 16.05.2023, 22.06.2023 |
| 2. | அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம். | 11.02.2021, 28.07.2021, 18.08.2021, 15.09.2021, 12.01.2022, 30.03.2022, 19.05.2022,23.06.2022, 07.09.2022, 15.11.2022, 27.12.2022, 22.02.2023, 21.04.2023, 16.05.2023, 22.06.2023 |

| | | |
|---|---|---|
| 3. | அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டணகழிப்பிடம் உபயோகிக்கும் நபர்களிடம் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் குத்தகை உரிமம். | 11.02.2021, 28.07.2021, 18.08.2021, 15.09.2021, 12.01.2022, 30.03.2022, 19.05.2022,23.06.2022, 07.09.2022, 15.11.2022, 27.12.2022, 22.02.2023, 21.04.2023, 16.05.2023, 22.06.2023 |
| 4. | ஆடு வதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துக்கொள்ளும் குத்தகை உரிமம். | 11.02.2021, 28.07.2021, 18.08.2021, 15.09.2021, 12.01.2022, 30.03.2022, 19.05.2022,23.06.2022, 07.09.2022, 15.11.2022, 27.12.2022, 22.02.2023, 21.04.2023, 16.05.2023, 22.06.2023 |

மேற்கண்ட வரிசை எண்.1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, கலம் 3–ல் தெரிவித்துள்ளவாறு பலமுறை ஏலம் / ஒப்பந்தப்பள்ளி கோரியும், உரிமங்களை எடுத்து நடத்த யாரும் முன்வரவில்லை. இதனால் இந்நகராட்சி பணியாளர்கள் மூலம் வரிசை எண்.1 முதல் 4 வரை உள்ள

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| **வ. எண்** | **வரியில்லா இனங்களின் விவரம்** | **கலம் 2–ல் தினசரி பணி மேற்கொள்ளும் பணியாளர்களின் எண்ணிக்கை** | **வசூல் பணி மேற்கொள்ள ஆகும் செலவின விவரம் (ரூ)** | **வரியில்லா இனங்கள் வசூல் விவரம் (ரூ)** | **இழப்பு தொகை (ரூ) (5–4)** |
| 1. | பழைய நகராட்சி அலுவலகத்தில், இந்நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் இருசக்கரவாகனம் நிறுத்திக்கொள்வதற்கான குத்தகை உரிமத்திற்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | **2** | **9,91,816** | **5,24,424** | **– 4,67,392/–** |
| 2. | அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம். | **2** | **9,44,660** | **8,17,023** | **– 1,27,637/–** |
| 3. | அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டணகழிப்பிடம் உபயோகிக்கும் நபர்களிடம் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் குத்தகை உரிமம். | **2** | **10,11,826** | **7,15,655** | **– 2,96,171/–** |
| 4. | ஆடு வதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துக்கொள்ளும் குத்தகை உரிமம். | **1** | **46,000** | **38,711** | **–7,289/–** |

இனங்களை நாளது தேதி வரை துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது

மேற்கண்ட இனங்களை இந்நகராட்சி பணியாளர்கள் மூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதற்கு, பணியாளர்களுக்கு வழங்கப்படும் வருடாந்திர ஊதியம் விவரம், வசூல் பணி மேற்கொள்ள ஆகும் இதர செலவினங்கள் மற்றும் அதிலிருந்து பெறப்படும் வருடாந்திர வசூல் விவரங்கள் கீழ்கண்டவாறு உள்ளது.

மேற்கண்ட இனங்களை இந்நகராட்சி பணியாளர்கள் மூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதற்கு, பணியாளர்களுக்கு வழங்கப்படும் வருடாந்திர ஊதியம் விவரம், வசூல் பணி மேற்கொள்ள ஆகும் இதர செலவினங்கள் மற்றும் அதிலிருந்து பெறப்படும் வருடாந்திர வசூல் விவரங்களை ஒப்பிட்டு பார்க்கும் போது, வரிசை எண் 1 முதல் 4 வரை உள்ள அனைத்து இனங்களும் கலம் 6–ல் கண்டுள்ளவாறு உத்தேசமாக இந்நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. எனவே கீழ்கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ளவாறு வைப்புத்தொகையினை குறைத்து ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வரியில்லா இனங்களின் விவரம் | ஏற்கனவே உள்ள வைப்புத்தொகை ரூ. | தற்போது குறைத்து கோரும் வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | பழைய நகராட்சி அலுவலகத்தில், இந்நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் இருசக்கரவாகனம் நிறுத்திக்கொள்வதற்கான குத்தகை உரிமத்திற்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | 5,00,000/- | 3,00,000/- |
| 2. | அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | 5,00,000/- | 3,00,000/- |
| 3. | அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டணகழிப்பிடம் உபயோகிக்கும் நபர்களிடம் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் குத்தகை உரிமம். | 5,00,000/- | 3,00,000/- |
| 4. | ஆடு வதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துக் கொள்ளும் குத்தகை உரிமம். | 50,000/- | 30,000/- |

**(ந.க.எண்.3809/2023/அ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

இந்நகராட்சிக்கு ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு தற்போது குறைத்து கோரப்பட்டுள்ள வைப்புத்தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

ஒம்/-இ.செல்வராணி
நகர்மன்றதலைவர்

/உண்மை நகல் /

ஆணையர்,
துறையூர்நகராட்சி